# தி.மு.க.வின் மேஜர் ஜெனரல் உதயநிதி ஸ்டாலின்!
## இராணுவ வீரர்கள் இளைஞர் அணியினர்: கொள்கைதான் எங்கள் சீருடை!!



**தி**ராவிட இயக்கம் என்பது இளந் தலைமுறைகளால் கட்டமைக்கப்பட்ட அரசியல். தந்தை பெரியாரின் கேள்வி மரபு, பேரறிஞர் அண்ணாவின் அரசியல் தெளிவு, முத்தமிழறிஞர் கலைஞரின் அறிவுசார் சட்ட வடிவங்கள் – இவை ஒவ்வொன்றும் தொலைநோக்கு சிந்தனைகளாக இருந்தவை. அவற்றைத் தொடர்ந்து உயிர்ப்புடன் நகர்த்த வேண்டிய பொறுப்பு இளைஞர்களிடமே இருந்தது. அந்த வரலாற்றுத் தேவையை பூர்த்தி செய்துவருகிறது கழக இளைஞர் அணி . இது வெறும் அணி அல்ல கழகத்தின் அரசியல் பாசறை என்பதை தன்னுடைய ஒவ்வொரு செயல்பாடுகளிலும் நிரூபிக்கிறார் கழக இளைஞர் அணி செயலாளர் அண்ணன் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

தி.மு.க. இளைஞர் அணியின் தனித்துவம், கருத்தியலும் கட்டமைப்பும் ஒரே நேரத்தில் முன்னெடுக்க ப்படுவதில்தான் உள்ளது. ஒருபுறம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளை சமூகத்தின் அடித்தள மக்கள்வரை கொண்டு செல்லும் கருத்தியல் பணிகள்; இன்னொரு புறம் கழகத்தின் தேர்தல் வெற்றிகளுக்குத் தேவையான அமைப்பு வலிமையை உருவாக்கும் அரசியல் பணிகள் – இந்த இரண்டையும் சமநிலையுடன் முன்னெடுத்து வந்திருக்கிறது இளைஞர் அணி.

**கழக இளைஞர் அணிச்செயலாளராக துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, இளைஞர் அணி புதிய அரசியல் பரிணாமத்தை அடைந்துள்ளது. திராவிட மாடல் பயிற்சி பாசறைகள், சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகங்கள், இயக்க வரலாற்றை பதிவு செய்யும் 'முரசொலி பாசறை பக்கம்', வாசிப்பை அரசியல் ஆயுதமாக மாற்றும் 'முத்தமிழறிஞர் பதிப்பகம்', 200க்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்களை உருவாக்கிய பயிற்சி முயற்சிகள், கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், இளம் ஆய்வாளர்களுக் கான கலைஞர் நிதி நல்கை, 1120 பக்கங்களில் 75 ஆண்டுகால தி.மு.க. வரலாற்றைப் பதிவு செய்த 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' போன்ற முயற்சிகள் — இவை அனைத்தும் திராவிட அரசியல் என்பது வெறும் முழக்கம் மட்டுமல்ல அல்ல; அது அறிவும் ஆழமும் கொண்ட சிந்தனை அரசியல் என்பதை உறுதிப்படுத்துகின்றன.**

**தமிழ் கா.அமுதரசன்**
*மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்*
*திராவிட முன்னேற்றக் கழகம்*



கருத்தியல் மட்டுமல்ல; மக்கள் பிரச்சினைகளிலும் இளைஞர் அணி தொடர்ந்து முன்னணியில் நின்றது. குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள், நீட் தேர்வு ஒழிப்புக்கான உண்ணாவிரதங்கள் மற்றும் கையெழுத்து இயக்கங்கள், தொகுதி மறுசீரமைப்பு, இந்தி திணிப்பு, ஒன்றிய அரசின் நிதிப் பாகுபாடு ஆகியவற்றுக்கு எதிரான தெருமுனைக் கூட்டங்கள் – இவை அனைத்தும் இளைஞர் அணியின் கள அரசியல் உறுதியை வெளிப்படுத்துகின்றன. இந்தப் போராட்டங்களுக்குப் பின்னணி சக்தியாக இருந்தது, இளைஞர் அணியின் வலுவான கட்டமைப்பே.

கொள்கைப் பாதையிலும், வாக்கு அரசியல் களத்திலும் லட்சோப லட்ச இளைஞர்களை பயிற்சிகொடுத்து பக்குவப்படுத்தி கழகத்தின் சிப்பாய்களாக மாற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேஜர் ஜெனரலாக உயர்ந்து நிற்கிறார் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

**இந்த ஆண்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில், இளைஞர் அணி இரண்டு முக்கிய முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சமூகவலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம், ஒன்றியம் முதல் வார்டு வரை அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் — இதன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாக இளைஞர் அணி உருவெடுத்துள்ளது. உலக அரசியலில், இத்தகைய அடித்தள கட்டமைப்பைக் கொண்ட இளைஞர் கழக இளைஞர் அணி மட்டும் தான் அந்த வரலாற்று பெருமைக்கு உரியவராக இளைஞர் அணிச் செயலாளர் உள்ளார்.**

இந்த 5 லட்சம் நிர்வாகிகளை ஒருங்கிணைத்து, கருத்தியல் ரீதியாகவும் தேர்தல் ரீதியாகவும் தயார்படுத்தும் நோக்கில், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் மண்டல நிர்வாகிகள் சந்திப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன.

**நிர்வாகிகள் சந்திப்பு என்பது எல்லோரும் ஒரு இடத்தில் கூட வேண்டும் என்று சம்பிரதாயத்திற்காக அழைப்பு விடுத்து கூடுவது அல்ல. ஐந்து லட்சம் நிர்வாகிகளின் பெயரையும் கழகத்தின் நாளேடான முரசொலியில் அறிவித்து , அவரவர் கைகளில் அந்த முரசொலியினை ஒப்படைத்தது, மாநாடு போல் நடக்கும் நிர்வாகிகள் சந்திப்பில் எப்படி கலந்துகொள்ள வேண்டும் , கூட்டத்தின் நோக்கம் என்ன என்பதை எல்லாம் முன்கூட்டியே அவரவர் பகுதியில் கூட்டமாக நடத்தி பயிற்சி பெற்று , ராணுவக்கட்டுப்பாடோடு நடைபெறுகிறது கழக இளைஞர் அணியின் நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்வு.**

2025 டிசம்பர் 14 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல சந்திப்பில் 1.30 லட்சம் இளைஞர்கள் பங்கேற்றது, இளைஞர் அணியின் வலிமையை வெளிப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக, 2026 பிப்ரவரி 7 அன்று விருதுநகர் – கல்குறிச்சியில் தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது. கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

2026 சட்டமன்றத் தேர்தலில், கழகத் தலைவரே மீண்டும் முதலமைச்சராகவும், திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்பதற்கான அரசியல் அடித்தளத்தை உறுதிப்படுத்தும் முக்கியமான நிகழ்வாக இந்த மண்டல நிர்வாகிகள் சந்திப்புகள் அமைந்துள்ளன.

திராவிட இயக்கம் குட்டிக்கதை பேசும் அரசியல் அல்ல; சமத்துவப்பதையில் நடந்து காட்டும் அரசியல். அந்த நடைபாதையின் முன்சுவராக, தலைமுறை அரசியலின் உயிர்சக்தியாக, தி.மு.க. இளைஞர் அணி இன்று தமிழ்நாட்டின் எல்லாத் திசைகளிலும் வேரூன்றிக் களத்தில் நிற்கிறது.

**திராவிட இயக்கத்தின் வரலாறு இளைஞர்களின் எழுச்சியால் எழுதப்பட்டது. அந்த வரலாற்றின் முதல் அத்தியாயத்தை திராவிட மாடல் நாயகர் , இந்தியாவின் முன்மாதிரி முதல மைச்சராகத் திகழும் ' கழகத் தலைவர்' அவர்கள் எழுதினார் என்றால், அடுத்த அத்தியாயத்தை கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் எழுதி வருகிறார்.**

**இளைஞர் அணி என்பது...**

**ரசிகர் கூட்டம் அல்ல**
**இது கொள்கைக் கூட்டம்**
**அரசியல் அறிவுள்ள கூட்டம்**
**களத்தின் தேவையை அறிந்துள்ள கூட்டம் .**

**இது சிந்தனையை களத்திற்கு கொண்டு செல்லும் இயக்கம்.**
**இது கருத்தை அதிகாரமாக மாற்றும் பயிற்சி மையம்.**

**தந்தை பெரியார் கேள்வி எழுப்பினார்.**
**பேரறிஞர் அண்ணா அரசியல் வடிவம் கொடுத்தார்.**
**தலைவர் கலைஞர் சட்டமாக மாற்றினார்.**
**தலைவர் தளபதி ஸ்டாலின் அதை ஆட்சிப் பொறுப்பாக நிறைவேற்றுகிறார்.**

இந்த சமூகநீதி , சமத்துவப்பாதையை இன்னும் நூற்றாண்டிற்கு கொண்டு செல்லக்கூடிய இளம்தலைவராக , திராவிட இயக்கத்தின் பெருமைமிகு தளபதியாக உழைப்பால் நம்பிக்கை கொடுத்து வருகிறார் அண்ணன் உதயநிதி ஸ்டாலின்.

**அதிகாரம் மையப்படுத்தப்படும் போது,**
**மாநில உரிமைகள் மறுக்கப்படும்போது**
**மொழிகள் ஒடுக்கப்படும் போது,**
**சமத்துவம் சந்தேகிக்கப்படும் போது,**
**கழக இளைஞர் அணி களத்தில் நிற்கிறது !**

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மகத்தான தலைவர் , திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் , முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற தலைவரின் ஆட்சிக்கு வாழும் கேடயமாக இருப்பவர்கள் இளைஞர் அணியின் அடலேறுகள் !

**ஒவ்வொரு மண்டலமும் - ஒரு போர்க்களம்!**
**ஒவ்வொரு நிர்வாகியும் - ஒரு போராளி!**
**ஒவ்வொரு இளைஞனும் - ஒரு அரசியல் ஆயுதம்!**

**கிராமம் முதல் மாநகரம் வரை**
**கருப்பு சிவப்பு கொடி உயர வேண்டும்!**
**வீதி முதல் வாக்குச்சாவடி வரை**
**திராவிட முழக்கம் எதிரொலிக்க வேண்டும்!**
**தந்தை பெரியார் சிந்தனையில் -**
**பேரறிஞர் அண்ணா வழியில் -**
**முத்தமிழறிஞர் கலைஞர் கனவில் -**
**தலைவர் தளபதி வழிகாட்டலில்**
**இளந்தலைவர் அண்ணன் உதயநிதி அவர்கள் தலைமையில் -**
**தி.மு.க. இளைஞர் அணி களத்தில் வெல்லும் !**

---

அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு

# எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

## மக்களவை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 11 –

அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருவதால் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் முடங்கியது.

நாட்டின் பலகோடி விவசாயிகளை பாதிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்திய விவசாயி களுக்கு எதிரான இந்த ஒப்பந்தம் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்திருந்தார்.

இந்நிலையில், மக்களவை கூடியதும், இவ்விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என டி.ஆர்.பாலு வலியுறுத்தினார். இந்த ஒப்பந்தம் இந்திய விவசாயிகளுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்றும் டி. ஆர்.பாலு தெரிவித்தார்.

இதே கோரிக்கையை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் இதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார். இதனால், காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தங்களது கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர். இதனைத் தொடர்ந்து மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நேற்று இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு, மலேயா பிரதமர் அன்வர் இப்ராஹிம் அவர்கள் அளித்த விருந்து நிகழ்வின்போது, எம்.ஜி.ஆர். நடித்த "நாளை நமதே" திரைப்படத்தில் வரும் 'நாளை நமதே' பாடல் பாடப்பட்டதாமே?

**பட்டணம் : ஆமாமய்யா; நல்ல வேளை ; எம்.ஜி.ஆர். நடித்த "தாய் சொல்லைத் தட்டாதே" திரைப் படத்தில் வரும் "போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக் கொடுத்தானே! அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து பூமியைக் கெடுத்தானே!.." என்ற பாடலைப் பாடாமல் விட்டார்களே!**

---

# திருத்துறைப்பூண்டி ஒன்றிய பொருளாளர் ஆர்.எம்.தமிழ்ஜோதி மறைவு!

## பூண்டி.கே.கலைவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி!

*திருவாரூர், பிப்.11-*

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழக பொருளாளராக இருந்து கழகப் பணியாற்றிய ஆர்.எம். தமிழ்ஜோதி அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 62.



மறைந்த ஆர்.எம். தமிழ்ஜோதி அவர்கள் திருத்துறைப்பூண்டி ஒன்றியக்கழகத்தின் பொருளாளராக பொறுப்பு வகித்து வந்தவர். மேலும் கட்டிமேடு ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவராகவும், கட்டிமேடு கிளைக்கழகத்தின் செயலாளராகவும், கட்டிமேடு அரசு உயர்நிலைப் பள்ளியின் மேலாண்மை குழுத் தலைவராகவும் திறம்பட பணியாற்றி வந்த செயல் மறவராவார்.

இவருக்கு முத்துக் கண்ணன் என்கிற மகனும், ஹேமா ரூபிணி என்கிற மகளும் உள்ளனர். இதில் தமிழ்ஜோதியின் மகன் முத்துக் கண்ணன் கட்டிமேடு ஊராட்சி கிளை இளைஞர் அணி அமைப்பாளர் ஆவார். தமிழ்ஜோதியின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், ஒன்றிய செயலாளர் ப.பிரகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ப.ஆடலரசன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, கிளைச் செயலாளர் ஏ.பி.எம்.செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை, வார்டு கழக நிர்வாகிகளும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

மறைந்த தமிழ்ஜோதி அவர்களின் இறுதி ஊர்வலம் 09.02.2026 திங்கள் மாலை கட்டிமேட்டில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

---

GST 2.0 சீர்திருத்தத்தால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள

# நிதி இழப்பைச் சரிசெய்ய எந்தத் திட்டமும் இல்லை!

## ஒன்றிய அரசின் பதிலுக்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம்!

*புதுடெல்லி, பிப்.11-*

*GST 2.0 சீர்திருத்தத்தால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள கடும் நிதி இழப்பை சரிசெய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று, நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதியமைச் சகத்திடம் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்விகளை முன்வைத்தார்.*

*இதற்கு "அப்படி எந்த நடவடிக்கையும் திட்டமிடப் படவில்லை" என, ஆணவத்தோடும் தமிழ்நாட்டின் மீது சிறிதும் அக்கறையற்ற தன்மையோடும் ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.*

**1. GST 2.0: ஆரம்பம் முதலே தமிழ்நாட்டின் குரலுக்கு இடமில்லை:**

*GST 2.0 முடிவைஎடுப்பதற்கு முன்பு என்னென்ன ஆய்வுகள் செய்யப்பட்டன என்ற கேள்வியை, ஒன்றிய அரசு தந்திரமாக தவிர்த்துள்ளது. இதற்கு மாறாக, பீகார் உள்ளிட்ட 6 மாநிலங்கள் அடங்கிய Group of Ministers குழு அளித்த பரிந்துரையை சமாளிப்பாக தெரிவித்துள்ளது.*

*முதன்மையாக, GST சீர்திருத்தம் போன்ற ஒவ்வொரு மாநிலத்தின் நிதிநிலைமை பற்றிய முக்கிய விவகா ரத்தில், Group of Ministers என்ற அணுகுமுறையேபோதுமானதல்ல என்பதே, பொருளாதார வல்லுநர்களின் கருத்து. இரண்டாவதாக, GST 2.0-க்காக அமைக்கப்பட்ட Group of Ministers-ல் நுகர்வு மாநிலங்களுக்கு மட்டுமே இடமளிக்கப்பட்டு, தமிழ்நாடு போன்ற உற்பத்தி மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டன.*

*இந்த நிலையில், அப்படியொரு குழுவின் முடிவை ஏற்று GST 2.0 சீர்திருத்தத்தை ஒன்றிய அரசு கொண்டுவந்தது, அடிப்படையிலேயே தவறாக எடுக்கப்பட்ட நடவடிக்கை.*



**2. தமிழ்நாட்டுக்கு 10000 – 15000 கோடி ரூபாய் வருவாய் இழப்பு; ஆனால், இழப்பீடு இல்லை!**

*GST 2.0-வில் அமலுக்கு வந்துள்ள 2 அடுக்கு வரி முறை(5% & 18%), தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை முடக்கும் உள்நோக்கம் கொண்டது. இந்த மாற்றத்தால் தமிழ்நாட்டிற்கு ஆண்டுக்கு 10,000 கோடி முதல் 15,000 கோடி வரைவருவாய் இழப்பு ஏற்படும் என்பதை, மாநில நிதியமைச்சர் அவர்கள் ஆதாரப்பூர்வமாக தெரிவித்துள் ளார்.*

*ஆனால், இது போன்ற நிதி இழப்பு குறித்து முறையான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளனவா, தமிழ்நாட்டிற்கு என்ன இழப்பீடு வழங்கப்படப் போகிறது என்ற கேள்விக்கு, "அப்படி எந்த திட்டமும் இல்லை" என ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.*

**3. பறிக்கப்படும் மாநில உரிமை:**

*'ST கவுன்சில்' என்ற பெயரில் மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தைஒன்றிய அரசு முழுமையாகத் தன்வசப் படுத்திக் கொண்டுவிட்டது. இப்போது, GST சீர்திரு த்தங்கள் என்ற பெயரில் மாநிலங்களின் நிதிநிலைமை மீதும் ஒன்றிய அரசு தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.*

*இப்படி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு முடிவையும் மாநிலங்கள் மீது திணிப்பதும், மாநிலங்கள் தங்கள் நிதித் தேவைகளுக்கு ஒன்றிய அரசிடம் கையேந்தி நிற்க வேண்டும் என்று செயல்படுவதும், இந்திய அரசியலமைப்பு வலியுறுத்தும் கூட்டாட்சித் தத்துவத்தை பகடியாக்கும் செயல்.*

*ஒன்றிய அரசு இனிமேல் GST முதல் அனைத்திலும் தமிழ்நாட்டின் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும். சமீபத்தைய GST சீர்திருத்தத் தால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பைஈடுகட்ட சிறப்பு நிதித்தொகுப்பை வழங்க வேண்டும்.*

*தமிழ்நாடு மக்களின் உரிமைகளைமீட்டெடுக்கவும், மாநில நிதிச் சுயாட்சியைப் பாதுகாக்கவும், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழிவந்த திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடும்!*

*இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.*




கோவை ஜி.பி.கேலக்ஸி அரங்கில் மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் முன்னிலையில் நடைபெற்ற "தமிழ்நாடு தலைகுனியாது" தொழில் முனைவோர் நகர் நலச் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கடலூர் புகழேந்தி சிறப்புரையாற்றினார். இதில் கழக தீர்மானக் குழு செயலாளர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கழக மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ்காந்தி, தெற்கு சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் சி.மகேந்திரன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார் உள்பட கழக நிர்வாகிகள், நகர் நலச் சங்க நிர்வாகிகள்,தொழில் முனைவோர் பலர் கலந்து கொண்டனர்.